# பொதுக்காலம் 24ஆம் வாரம் - ஞாயிறு

# முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

மன்னிப்பும் இரக்கமும் மனிதனின் இரு கண்களாக இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து வாழ்வில் செயல்படுத்த இன்றைய பொதுக்காலம் 24ஆம் ஞாயிறு திருப்பலி நம்மை அழைக்கிறது.

மன்னிப்பு என்பது கோழைத்தனம் அல்ல; குணங்களுக்கெல்லாம் மேலானது. மனதால் மன்னிக்கும் போது உடலும் புத்துயிர் பெறுகிறது என்று கூறுகிறது அறிவியல். இரக்கம் என்பது மனதால் வருந்துவது அல்ல; துன்பப்படுபவரின் துயரைத் துடைக்க நம் கரங்களை உயர்த்துவதுதான். எனவே இத்தகைய உன்னத குணங்களை உடையவர்களாக வாழ்வோம்.

இன்றைய முதல் வாசகத்தில், 'சினங்கொள்ளாதே, குற்றங்களைப் பொருட்படுத்தாதே' என்று நற்குணங்களை எடுத்துரைக்கிறது சீராக்கின் ஞான ஆகமம். வெகுளி, சினம் இவை பாவிகளின் குணங்கள் என்கிறது விவிலியம். இவை இரண்டும் நம்மிலிருந்து களையப்பட்டால் இறைவனுக்கு மிக அருகில் செல்லலாம். பிறர் மீது வெளிப்படும் வெறுப்பின் காரணமாகவே சினம் எழுகிறது. சினம் அதிகரித்தால் கொலை கூட நிகழும். எனவே நம் மனதில் பிறரை வெறுக்காமல் நேசிப்போம். அப்போதுதான் இறைவன் நம்மில் இரக்கம் கொள்வார்.

இன்றைய நற்செய்தியில், "தம் சகோதர சகோதரிகளை மனமார மன்னிக்காவிட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்கமாட்டார்" என்று மன்னிப்பின் மேன்மையை இயேசு வெளிப்படுத்துகிறார்.

மனதில் மன்னிப்பு என்வது நிறைந்திருந்தால் உடலும் உள்ளமும் லேசானதாகவே இருக்கும். மனதில் தோன்றும் தீராத சினம், வெறுப்பு போன்றவை தான் உடலில் தோன்றும் தீராத நோய்களுக்கு காரணம் என்கிறது அறிவியல். தம்மைச் சிலுவையில் அறைந்து கொன்றவர்களை கூட மன்னித்தவர் இயேசு. அவரது பிள்ளைகள் நாம் என்பதை நமது குணங்களில் வெளிப்படுத்துவோம். நல் எண்ணங்களோடு இப்பலியில் பங்கேற்போம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. இரக்கமும் அருளும் கொண்டவரே எம் இறைவா!

எம் திரு அவையை வழிநடத்த நீர் தேர்ந்தெடுத்த திருத்தந்தை, திருச்சபைப் பணியாளர்கள் வாழும் கிறிஸ்துவாக இவ்வுலகில் செயல்படவும், அநீதிக்குப்

பயப்படாமல், சமூக அவலங்களைக் கண்டிக்கும் செயல்களில் பங்கேற்கவும், பிறரன்புப் பணியில் ஈடுபட்டு, மக்களுக்கு சிறந்த முன்மாதிரிகளாகச் செயல்பட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நற்குணங்களோடு வாழ அழைப்பவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள், அதிகாரிகள் தமது பணியை உணர்ந்து நாட்டு மக்களின் நலமும் வளமுமே இரு கண்களாக கொண்டு பணியாற்றவும், தங்களின் பொறுப்பற்ற தனத்தை சரிகட்ட வரிகளை மக்கள் மீது சுமத்தாமல், அறிவுத் தன்மையோடு செயல்பட்டு, பொருளாதார சரிவை மேம்படுத்த நல்லறிவு தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. “சகோதர, சகோதரிகளுக்கு இரக்கம் காட்டுங்கள்” என்றவரே எம் இறைவா!

எம் பகுதியில் வாழும் உடல் நலமற்றோர், வயதானோர், ஆதரவற்றோர் போன்றோருடன் எங்களது பொருட்களையும், நேரத்தையும் பகிர்ந்து, அன்புறவுச் செயல்களில் ஈடுபடவும், எளிய நிலையில் இருக்கும் குழந்தைகளுக்கு கல்வித் தேவைகளில் உதவி புரியவும் நல்மனம் அருள வேண்டுமென்று இறைவா உம்மை நோக்கி மன்றாடுகிறோம்.

4. விண்ணக கதவுகளைத் திறந்து ஆசியைப் பொழிபவரே எம் இறைவா!

எம் பகுதி வாழ் மக்களை ஆசீர்வதியும். போதிய இயற்கைக் காலச் சூழ்நிலை நிலவும், வேளாண்மை சிறக்கவும், நோய்த் தொற்று குறைந்து மக்களின் இயல்பு வாழ்வு திரும்பவும், குடும்பங்களில் அமைதி, மகிழ்ச்சி பெருகவும், மாணவர்களுக்கான எதிர்காலம் சீராகவும், உள்ளத்தின் தேவைகள் இறை அருளால் நிறைவேற்றப்படவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: திருமதி ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com